மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
இ.ம.எண்.03/2021
அ.வ.எண்.68/2021

1. காயத்ரி
2. மைனர் இளவரசி
(அவரது சார்பாக அவரது தாயார்
3 ம்மனுதாரர் கலா)
3. கலா
4. சரவணன் (இறந்தவர்) ... மனுதாரர்கள்/வாதிகள்
(இ.ம.எண்.06/2021 ல் 25.02.2022 ம்
தேதியிட்ட உத்தரவின்பேரில் திருத்தப்பட்டது)

/எதிராக/

1. நல்லதம்பி
2. துரை (எ) செல்வகுமார்
3. கண்ணன்
4. பாஸ்கர்
5. ராமலிங்கம்
6. அர்ஜுன் விஜய் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 20.12.2022 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.சிவராமன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.சரவணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151-ன் கீழ் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் :-

(i) வாதிகள்/மனுதாரர்கள் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளனர். மனு

சொத்தான தாவா "A" அட்டவணை மற்றும் "B"அட்டவணை சொத்துகள் உட்பட நல்லுகவுண்டருக்கு சுமாா 40 ஏக்கர் பூர்வீக நிலம் இருந்தது. நல்லுகவுண்டருக்கு முதல் மனைவியின் மூலம் செம்மண்ண மற்றும் துரைசாமி கவுண்டர் என இரண்டு மகன்கள் உள்ளனர். இரண்டாவது மனைவி மூலம் மாரிமுத்து என்ற மகன் உள்ளார்.

(ii) நல்லுகவுண்டர் இறந்ததற்கு பின்னிட்டு அவரது பூர்வீக சொத்தான 40 ஏக்கர் நிலத்தை அவரது 3 மகன்களும் வாய்மொழி பாகபிரிவினை செய்து கொண்டனர். அதன்படி செம்மண்ண கவுண்டருக்கு கிழக்குபுறத்தில் ச.எண்.147, 148, 151 மற்றும் 107 ல் 15 ஏக்கரும், துரைசாமிக்கு ச.எண்.102, 147, 107 ல் 12 ஏக்கரும், மாரிமுத்துவிற்கு தெற்குபுறத்தில் ச.எண்.147, 148, 102 ல் 12 ஏக்கரும் ஒதுக்கப்பட்டு அவரவர் சுவாதீனத்தில் இருந்துவருகின்றனர்.

(iii) மேற்படி துரைசாமி தான் வாழும் காலத்திலேயே தனக்கு பாத்தியப்பட்ட 12 ஏக்கரில் 1 ஏக்கர் 40 சென்ட் நிலத்தை விற்றுவிட்டார். மேற்படி துரைசாமியின் மகன் சென்றாயன் ஆவார். மேற்படி சென்றாயனுக்கு 4ம் மனுதாரர் மகன் ஆவார். மேற்படி 4ம் மனுதாரருக்கு 3ம் மனுதாரர் கலா மனைவியும், 1ம் மனுதாரர் காயத்ரி, 2ம் மனுதாரர் இளவர் இளவரசி ஆகியோர் மகள்களும் ஆவர். 4ம் மனுதாரர் மது பழக்கத்திற்கு அடிமையானதால் சென்றாயன் தாவா "A" அட்டவணை சொத்திலுள்ள 7 ஏக்கர் நிலத்தை 100 தென்னை மற்றும் 100 பனை மரங்களுடன் தன் பேத்திகளான 1, 2 மனுதாரர்களுக்கு 01.10.2012ம் தேதியில் தான செட்டில்மெண்ட் அளித்தார். அதே போல் சென்றாயன் 23.10.2019ம் தேதியில் தன் மகனான 4ம் மனுதாரர் சரவணனுக்கு "B" அட்டவணை சொத்திலுள்ள 3 ஏக்கர் நிலத்தை தானசெட்டில்மெண்ட் அளித்துள்ளார்.

(iv) மேற்படி "B" அட்டவணை சொத்தான 3 ஏக்கர் நிலத்தில் 4ம் மனுதாரர் 1 ஏக்கர் நிலத்தை 3ம் நபர்களுக்கு விற்றுவிட்டார். இந்நிலையில் தாவா "A" மற்றும் "B" அட்டவணை சொத்துகளை பொறுத்து மனுதாரர்கள் முழுமையான உரிமையாளர்கள் ஆகின்றனர். பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்கள் செம்மண்ண கவுண்டரின் வாரிசுகளும் மனுதாரர்களின் பங்காளிகளும் ஆவர். மனு சொத்தில் எவ்வித உரிமையும் இல்லாத

3ம் நபர்கள் ஆவர். மனு சொத்திற்கு தெற்குபுறத்தில் மனுதாரர்களின் பட்டா நிலத்தில் 60 ஆண்டுகளுக்கு மேலாக 8 அடி அகல வழிப்பாதை உள்ளது. மேச்சேரி பென்னாகரம் பிரதான சாலையை சென்றடைய மேற்படி வழிப்பாதையை தான் சுற்று வட்டார மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

(v) மேற்படி வழிப்பாதையை தாங்கள் மட்டும் பயன்படுத்தும் நோக்கில் எதிர்மனுதாரர்கள் சென்றாயனிடம் தடவழி கிரய பத்திரம் எழுதி தருமாறு கோரியதை அவர் மறுத்துவிட்டார். அதனால் சென்றாயம் இறந்த பின்னர் தற்போது மனுதாரர்களின் குடும்ப சூழ்நிலையை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி மனுதாரர்களுடன் தகராறு செய்து வருகின்றனர். மனுதாரர்கள் தங்கள் நிலத்தில் வீடு கட்டுவதை எவ்வித உரிமையும் இல்லாமல் தடுத்து வருகின்றனர். தாவா "A" அட்டவணை சொத்தில் மனுதாரர்களின் அமைதியான சுவாதீனத்திற்கும், அனுபவத்திற்கும் பல வகைகளில் இடையூறு செய்து வருகின்றனர்.

(vi) கடந்த 14.03.2021ம் தேதியில் மனுதாரர்கள் தங்களது புதிய வீட்டிற்கு சுற்றுப்புற சுவர் கட்டுவதற்காக தாவா "A" அட்டவணை சொத்துகளில் உள்ள பனைமரங்களில் சிலவற்றை வெட்ட முயன்ற போது எதிர்மனுதாரர்கள் தடுத்து மேற்படி பனைமரங்களில் தங்களுக்கு உரிமை கோரினர். மீண்டும் கடந்த 11.04.2021ம் தேதியில் மனுதாரர்கள் சுற்றுப்புற சுவர் கட்டுவதை எதிர்மனுதாரர்கள் தடுத்து மனுதாரர்களின் அமைதியான சுவாதீனத்திற்கு இடையூறு செய்தனர்.

(vii) தாவா சொத்திற்கு எவ்விதத்திலும் தொடர்பில்லாத எதிர்மனுதாரர்களின் சட்டபுறம்பான செயல் குறித்து காவல்நிலையத்தில் புகார் அளித்தும் நடவடிக்கை இல்லாததால் மனுதாரர்கள் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 1ம்எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 2 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

(i) மனு பொய்யானது. உண்மைக்கு புறம்பானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. தாவா சொத்துகள் மனுதாரரின் பூர்வீக சொத்துகள் என்பதை

அவர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள். 4ம் மனுதாரரின் பாட்டனார் துரைசாமி தனக்கு ஒதுக்கப்பட்ட பாகம் முழுவதையும் தானே அனுபவித்தார் என்பது தவறானதாகும். மேற்படி துரைசாமியை அவரது மகன் சென்றாயன் கொலை செய்து தண்டனை அனுபவித்து வந்தார். அதனால் இந்து வாரிசுரிமைச்சட்டம், பிரிவு 25ன்படி மேற்படி துரைசாமியின் சொத்தில் சென்றாயனுக்கு எவ்வித வாரிசுரிமையும் இல்லை.

(ii) மேற்படி சென்றாயனுக்கு 4ம் மனுதாரர் மட்டும் தான் வாரிசு என்பது தவறானதாகும். சென்றாயனுக்கு ரத்தினம் என்ற பெண் வாரிசும், அவருக்கு கண்ணம்மாள், அருள் மோகன், அருள் பிரசாத் என்ற வாரிசுகளும் உள்ளனர். எனவே மேற்படி நபர்களும் இவ்வழக்கிற்கு தேவையான தரப்பினர்கள் ஆவர். மேற்படி தேவையான தரப்பினர்களை சேர்க்காததால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல.

(iii) தாவா "A" அட்டவணை சொத்திற்கு 1, 2 மனுதாரர்களும், தாவா "B" அட்டவணை சொத்திற்கு 4ம் மனுதாரரும் முழுமையான உரிமையாளர்கள் என்பது தவறானதாகும். மேற்படி சென்றாயனால் 01.10.2012ம் தேதியில் 1, 2 மனுதாரர்கள் பெயருக்கும், 23.10.2019ம் தேதியில் 4ம் மனுதாரருக்கும் எழுதிக் கொடுக்கப்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவணங்கள் சட்டப்படி செல்லாதவையாகும். எனவே மல்லிகுந்தம் கிராமம் ச.எண்.102/2A1ல் தென்புறத்தில் கிழமேலாக செல்லும் 23அடி தடவழியை பொறுத்தும் மேற்படி சென்றாயனுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுக்க எவ்வித உரிமையும் இல்லை.

(iv) மேற்படி தடவழி பாதையின் தெற்குபுறத்தில் 3அடி உயரத்தில் கல்கரையும், வடக்கு புறத்தில் மேற்படி பனைமரங்களும் நல்லுகவுண்டர் காலத்திலேயே நடப்பட்டுள்ளன. மேற்படி வழித்தடமானது நல்லுகவுண்டரின் வாரிசுகளுக்கு மட்டுமே பொதுவாக பாத்தியப்பட்டதாகும். 3ம் நபர்கள் மேற்படி வழித்தடத்தை பயன்படுத்த முடியாது. மேற்படி வழித்தடத்தின் மூலம் தான் எதிர்மனுதாரர்கள் ச.எண்.102/2Aவில் மேற்கில் அமைந்துள்ள வழித்தடத்தையும், ச.எண்.107/10 மற்றும் 147/2 ஆகியவற்றில் உள்ள தங்களது பூர்வீக சொத்துகளையும், மேற்கிலுள்ள பென்னாகரம் பிரதான சாலையையும் அடைய இயலும்.

(v) மேற்படி வழித்தடத்தை எதிர்மனுதாரர்களும், அவர்களது முன்னோர்களும் 100 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பயன்படுத்தி வருவதால் எதிர்மனுதாரர்களுக்கு மேற்படி வழித்தடத்தின் மீது துய்ப்புரிமை உள்ளது. எனவே தாவா சொத்தின் மீது எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என சொல்வது பொய்யானதாகும். அதேபோல் தாவா சொத்திலுள்ள வழிப்பாதையில் பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர் என்பதும் பொய்யானதாகும். தாவா வழிப்பாதை 8 முதல் 10 அடி அகலம் இருக்கும் என்பது தவறானதாகும். மேற்படி வழிப்பாதை 23 அடி அகலமுடைய வழிப் பாதையாகும்.

(vi) மனுதாரர்கள் கூறுவதுபோல் எதிர்மனுதாரர்கள் தாவா "A" அட்டவணை சொத்தை அனுபவிக்க முயற்சிப்பதாகவும், அதனால் மனுதாரர்கள் புதிதாக வீடு கட்டுவதற்கும், அவர்களது சுவாதீனத்திற்கும், அனுபவத்திற்கும் 14.03.2021 மற்றும் 11.04.2021 ஆகிய தேதிகளில் இடையூறு செய்து வருவதாகவும் கூறுவது முற்றிலும் தவறானதாகும். 01.10.2021ம் தேதிய செட்டில்மெண்ட் ஆவணத்தில் 100 தென்னை மரங்களும், 100 பனைமரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது தவறானதாகும். தாவா சொத்திற்கு அருகில் எதிர்மனுதாரர்களுக்கு எந்த சொத்தும் இல்லை என்று சொல்வது தவறானதாகும்.

(vii) மேற்படி பனைமரங்கள் 100 ஆண்டுகளுக்கு முன்னர் நல்லுகவுண்டர் காலத்திலேயே ச.எண்.102/2A1ல் உள்ள தடவழியில் வடக்குபுறத்தில் நடப்பட்டுள்ளன. மேற்படி வழித்தடமானது நல்லுகவுண்டரின் 3 வாரிசுகளுக்கு மட்டும் பொதுவாக விடப்பட்டவை. எதிர்மனுதாரர்களின் பாக சொத்துகளுக்கு மேற்படி தடவழியின் மூலமாக தான் சென்றடைய முடியும் என வருவாய் ஆவணங்கள் குறிப்பிடப்பட்டு உள்ளது. மேற்படி தடவழிகளிலும், அதன் வடக்கு புறத்தில் நடப்பட்டுள்ள பனை மரங்களிலும் எதிர்மனுதாரர்களுக்கும் உரிமை உள்ளது. எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் தரப்பில்

சாட்சியங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேட்டுர் முதுநிலை வருவாய் ஆய்வாளர் திரு.V.உமாசங்கர் என்பவர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.19 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் தரப்பில் தாவா "A" அட்டவணை சொத்தின் தெற்குபுறத்தில் மனுதாரர்களின் பட்டா நிலத்தில் 60 ஆண்டுகளுக்கு மேலாக 8 அடி அகல வழிப்பாதை உள்ளது எனவும், மேச்சேரி பென்னாகரம் பிரதான சாலையை சென்றடைய மேற்படி வழிப்பாதையை தான் சுற்று வட்டார மக்கள் பயன்படுத்தி வருகின்றனர் எனவும், மேற்படி வழித்தடத்தின் வடக்கு புறத்தில் பனை மரங்கள் அமைந்துள்ளன என்றும், மனுதாரர்கள் புதிதாக கட்டும் வீட்டிற்கு சுற்றுப்புற சுவர் அமைப்பதற்காக மேற்படி பனை மரங்களில் சிலவற்றை அகற்றும்பொழுது எதிர்மனுதாரர்கள் தகராறு செய்கிறார்கள் எனவும், மேலும் எதிர்மனுதாரர்கள் தாவா "A" அட்டவணை சொத்தில் மனுதாரர்களின் அமைதியான சுவாதீனத்திற்கும், அனுபவத்திற்கும் இடையூறு செய்கிறார்கள் எனவும், எனவே எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்குமாறு மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி பனைமரங்கள் 100 ஆண்டுகளுக்கு முன்னரே மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்களின் எள்ளு பாட்டனார் நல்லுகவுண்டர் காலத்தில் ச.எண்.102/2A1ல் உள்ள தடவழியில் வடக்குபுறத்தில் நடப்பட்டவை என்றும், மேற்படி வழித்தடமானது நல்லுகவுண்டரின் வாரிசுகளுக்கு மட்டுமே பொதுவாக விடப்பட்டவை என்றும், எதிர்மனுதாரர்களின் பாக சொத்துகளுக்கு மேற்படி தடவழியின் மூலமாக தான் சென்றடைய முடியும் என்றும், மேற்படி வழிப்பாதையை பொறுத்தும், அதிலுள்ள

பனைமரங்களை பொறுத்தும் எதிர்மனுதாரர்களுக்கு துய்ப்புரிமை உள்ளது என்றும், மேற்படி வழித்தடமானது வருவாய் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டு உள்ளது என்றும், எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மனுதாரர்களால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தரப்பினர்களின் வாதுரைகளை கவனமாக பரிசீலனை செய்கையில் மனுதாரர்களும், எதிர்மனுதாரர்களும் ஒரே குடும்பத்தை சேர்ந்த பங்காளிகள் என தெரிய வருகிறது. அதேபோல் மல்லிகுந்தம் கிராமம், ச.எண்.102/2A1–ல் தெற்கு புறத்தில் கிழ மேலாக வழிப்பாதை அமைந்துள்ளது என்பதும் தெரியவருகிறது. மேற்படி வழிப் பாதையானது நல்லுகவுண்டர் காலத்திலேயே அமைக்கப்பட்டு, பின்னர் அவரது மகன்களான செம்மண்ணகவுண்டர், துரைசாமி, மாரிமுத்து ஆகியோர்களிடையே 75 ஆண்டுகளுக்கு முன்னர் வாய்மொழி பாகபிரிவினை ஏற்பட்டபோது, மேற்படி மூவருக்கும் பொதுப்பாதையாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது.

(iv) இந்நிலையில் மனுதாரர்கள் தரப்பில் மேற்படி பாதை 8 முதல் 10 அடி வரை இருக்கும் எனவும், மேற்படி பாதையை மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள், சுற்று வட்டாரத்திலுள்ள பொதுமக்கள் அனைவரும் மேச்சேரி – பென்னாகரம் பிரதான சாலைக்கு செல்ல வழித்தடமாக பயன்படுத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி தடவழி 23 அடி அகலம் கொண்டது எனவும், மேற்படி தடவழியை சுற்று வட்டார பகுதியிலுள்ள பொதுமக்கள் பயன்படுத்தி வருவதாக கூறுவதும் பொய்யானது என்றும், மேற்படி தடவழி மனுதாரர்களுக்கும், எதிர்மனுதாரர்களுக்கும் மட்டுமே பாத்தியப்பட்ட தனிப்பட்ட குடும்ப சொத்து என்றும் மறுத்துரைக்கப்பட்டுள்ளது.

(v) அதேபோல் மனுதாரர்களால் தாவா "A" அட்டவணை சொத்தில் 100 தென்னை மரங்களும், 100 பனை மரங்களும் இருப்பதாகவும், மேற்படி தாவா "A" அட்டவணை சொத்தின் தெற்குபுறத்தில் அமைந்துள்ள தடவழியின் வடக்குபுறத்தில் மேற்படி பனை

மரங்கள் வரிசையாக அமைந்துள்ளதாகவும், 01.10.2012 ம் தேதிய தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின்படி மேற்படி பனைமரங்களும், தென்னை மரங்களும் 1, 2 மனுதாரர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்த் தரப்பில் 01.10.2012 ம் தேதிய தானசெட்டில்மெண்ட் ஆவணம் செல்லாதது எனவும், மேற்படி வழித்தடத்தின் வடக்கு புறத்தில் சுமார் 70 பனை மரங்கள் அமைந்துள்ளது எனவும், அவை சுமார் 100 ஆண்டுகள் பழமையானவை என்றும், நல்லுகவுண்டர் காலத்திலேயே அவை நடப்பட்டவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(vi) மேலும் மேற்படி தடவழியானது மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்களின் முன்னோர்களால் பென்னாகரம் பிரதான சாலையை அடைவதற்காக பயன்படுத்தப்பட்டு வந்ததால் மேற்படி தடவழியானது இருவருக்கும் பொதுவான பொதுப்பாதை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தடவழியானது துரைசாமிக்கு பாகம் பிரிக்கப்பட்ட சொத்திற்கும், மாரிமுத்துக்கு பாகம் பிரிக்கப்பட்ட சொத்திற்கும் இடையே ச.எண்.102/2A1 ன் தெற்கு புறம் 23 அடி அகலத்தில் கிழமேலாக செல்கிறது எனவும், வருவாய் துறையினரால் பட்டா வழங்கப்பட்ட சமயத்தில் மேற்படி தடவழிக்கு துரைசாமியின் பெயரில் பட்டா வழங்கப்பட்டுவிட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(vii) மேற்கண்ட சங்கதிகளை கருத்தில் கொள்கையிலும், தரப்பினர்களால் குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையிலும், மனுதாரர்களால் சாட்டுரைக்கப்பட்டு, எதிர்மனுதாரர்களால் மறுக்கப்பட்ட சங்கதிகள் அனைத்தும் சட்டம் மற்றும் சங்கதிகள் கலந்த எழுவினாக்கள் தொடர்புடையவை என்பதாலும், மேற்படி எழுவினாக்கள் அனைத்தும் இருதரப்பினரது வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் அடிப்படையில் முழுமையான வழக்கு விசாரணைக்கு பின்னரே தீர்மானிக்கத்தக்கவை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(viii) இச்சூழ்நிலையில் மனுதாரர்கள் தாவாவில் கோரியுள்ள அதே உறுத்துக்கட்டளை பரிகாரத்தை இடைநிலை மனுவிலும் கோரியுள்ளார். மனுதாரர்களால் தாவாவில் கோரப்பட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், இந்த இடைநிலை மனுவில் கோரப்பட்டுள்ள இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரமும் ஒரே மாதிரியான தன்மை

கொண்டதாகவும், ஒத்த இயல்புடையதாகவும் உள்ளது என தெரியவருகிறது. எனவே மேற்படி பிரச்சனைகளையும், அதன் தகுதிப்பாடுகளையும் இடைநிலை மனுவில் தீர்மானிப்பது என்பது ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்துவதற்கு ஒப்பானதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(ix) மேலும் இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும், தரப்பினர்களது வாதங்களையும் கருத்தில் கொள்கையில் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையானது சங்கதி மற்றும் சட்டம் கலந்த எழுவினாவாக உள்ளது என தெரியவருகிறது. இவ்வழக்கானது பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு, தற்போது வழக்கு எழுவினாக்கள் வனையப்பட்டு, வழக்கு விசாரணைக்கு உள்ளதை கருத்தில் கொள்கையில், வழக்கு விசாரணையின் பொழுது தரப்பினர்களால் முன்னிலைப்படுத்தப்படும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்க இயலும் எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(x) மாண்பமை உச்சநீதிமன்றத்தால் "*Anand Prasad Agarwalla /Vs/ Tarkeshwar Prasad & Ors", reported in "2001 (5) SCC 568"* என்ற வழக்கில்,

> *"It may not be appropriate for any Court to hold mini trial at the stage of grant of temporary injunction."*

என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சட்ட நிலைப்பாட்டின் அடிப்படையில் மனுதாரர்களால் காண்பிக்கப்பட்டுள்ள முதல் தோற்ற வழக்கானது இருதரப்பு ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு விசாரணையின் மூலம் தான் தீர்மானிக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இச்சூழ்நிலையில் மாண்பமை உச்சநீதிமன்றம் மேற்கண்ட வழக்கில் கூறியுள்ளபடி, இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xi) இருப்பினும் இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொள்கையில் தாவா "A" அட்டவணை சொத்தின் தெற்குபுறத்தில் தடவழி உள்ளதை எதிர்மனுதாரர்கள் மறுக்கவில்லை என்பதை கருத்தில் கொள்கையிலும், மேற்படி

தடவழி மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகிய இருவராலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை கருத்தில் கொள்கையிலும், மேற்படி தடவழியின் வடக்கு புறத்தில் பனைமரங்கள் உள்ளதாக இருதரப்பிலும் ஏற்றுக் கொண்டுள்ளதை கருத்தில் கொள்கையிலும், இவ்வழக்கில் தரப்பினர்கள் தற்போதுள்ள அவரவர்களின் அனுபவ நிலையில் வழக்கு முடியும் வரை இருதரப்பினரும் உள்ளது உள்ளபடியே வைத்து வரவேண்டும் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(xii) இம்மனுவில் பரிசீலனை செய்து முடிவு செய்யப்பட்ட சங்கதிகள் அனைத்தும் இம்மனுவை பொறுத்த முடிவுகள் தான். அவைகள் அசல் வழக்குக்கு பொருந்தாது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக வழக்கு "B" அட்டவணை சொத்தில் தரப்பினர்களின் தற்போதைய அனுபவ நிலை உள்ளது உள்ளபடியே (status quo) வழக்கு முடியும் வரை வைத்திருக்க வேண்டும் எனவும், அவரவர் செலவுத்தொகைகளை அவரவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2022.12.23 19:04:53 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :- இல்லை</u>

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:-</u>

| வரிசை எண். | தேதி | ஆவணங்கள் | தன்மை |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 01.10.2012 | செல்லம் பெயரிலுள்ள செட்டில்மெண்ட் பத்திரம் | சான்றிட்டநகல் |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.2 | 23.10.2019 | 4ம் மனுதாரர் பெயரிலுள்ள செட்டில் மெண்ட் பத்திரம் | சான்றிட்டநகல் |
| ம.சா.ஆ.3 | 09.11.2001 | மேட்டூர் துணை வட்டாட்சியரின் செயல் முறைகள் | அசல் |
| ம.சா.ஆ.4 | 22.12.2020 | கணிணி பட்டா எண்.3873 | கணிணிநகல் |
| ம.சா.ஆ.5 | 30.02.2000 | வீட்டுவரி ரசீது | அசல் |
| ம.சா.ஆ.6 | 24.03.2021 | மின்கட்டண ரசீது | அசல் |
| ம.சா.ஆ.7 | 14.03.2021 | மேச்சேரி காவல் ஆய்வாளரிடம் அளித்த புகார் மனு,<br>மனு ரசீது | நகல்<br>அசல் |
| ம.சா.ஆ.8 | 16.04.2021 | சேலம் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் அளித்த புகார் மனு | நகல் |
| ம.சா.ஆ.9 | 16.04.2021 | சேலம் மாவட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளரிடம் அளித்த புகார் மனு | நகல் |

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி:–</u>

எ.ம.சா.1 திரு.V.உமாசங்கர் (முதுநிலை வருவாய் ஆய்வாளர், மேட்டூர்)

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| வரிசை எண். | தேதி | ஆவணங்கள் | தன்மை |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 21.04.2008 | கணிணி பட்டா எண்.2006 | சார்வுநகல் |
| எ.ம.சா.ஆ.2 | 21.04.2008 | கணிணி பட்டா எண்.562 | சார்வுநகல் |
| எ.ம.சா.ஆ.3 | 21.04.2008 | கணிணி பட்டா எண்.1847 | சார்வுநகல் |
| எ.ம.சா.ஆ.4 | 19.11.2001 | மேட்டூர் தணை வட்டாட்சியரின் செயல் முறைகள் | சார்வுநகல் |
| எ.ம.சா.ஆ.5 | 17.02.2009 | பாகப்பிரிவினை பத்திரம் | சான்றிட்டநகல் |
| எ.ம.சா.ஆ.6 | 27.01.2004 | பாகப்பிரிவினை பத்திரம் | சான்றிட்டநகல் |
| எ.ம.சா.ஆ.7 | 14.03.2021 | மனு ரசீது | சார்வுநகல் |
| எ.ம.சா.ஆ.8 | | அ.வ.எண்.64/2021ன் வழக்குரை | சார்வுநகல் |
| எ.ம.சா.ஆ.9 | | மாதிரி வரைபடம் | சார்வுநகல் |
| எ.ம.சா.ஆ.10 | 16.10.2022 | புல வரைபடம் | நகல் |
| எ.ம.சா.ஆ.11 | | புகைப்படங்கள் (4 எண்ணிக்கை) | அசல் |
| எ.ம.சா.ஆ.12 | | பென்டிரைவ் | அசல் |
| எ.ம.சா.ஆ.13 | 15.10.2022 | புகைப்பட ரசீது | அசல் |

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.14 | 25.10.2022 | மேட்டூர் வட்டாட்சியரின் கடிதம் | அசல் |
| எ.ம.சா.ஆ.15 | 25.10.2022 | மாதிரி வரைபடம் | சான்றிட்டநகல் |
| எ.ம.சா.ஆ.16 | 25.10.2022 | மாதிரி வரைபடம் | சான்றிட்டநகல் |
| எ.ம.சா.ஆ.17 | 22.10.2022 | புல வரைபடம் | உண்மைநகல் |
| எ.ம.சா.ஆ.18 | 25.10.2022 | பதிவறை எழுத்தரின் கடிதம் | அசல் |
| எ.ம.சா.ஆ.19 | 25.10.2022 | அ பதிவேடு | சான்றிட்டநகல் |

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2022.12.23 19:05:01 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.